அடையாள இலக்கம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| H | | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2023

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

## அடிப்படை எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

## (அ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**.

1. நமது நாட்டில் தானியம் விளையும் ________________அதிகம் உள்ளன.

   அ) நிழங்கள் ஆ) நிலங்கள்

   இ) நிளங்கள் ஈ) நீழங்கள்

2. பாடசாலை அதிபர் பரிசளிப்பு விழாவில் ___________ நிகழ்த்தினார்.

   அ) உறை ஆ) உரை

   இ) உறய் ஈ) உழை

3. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ________________ என அழைக்கப்படும்.

   அ) முத்தமில் ஆ) முத்தமிழ்

   இ) முத்தமிள் ஈ) முற்தமிழ்

4. பாடசாலை முடிந்ததும் ________________ வீடு திரும்பினார்கள்.

   அ) மாணவன் ஆ) மாணவர்கள்

   இ) மாணவி ஈ) மனிதன்

5. மணமகன் மணப்பெண்ணின் கழுத்தில் ________________ சூட்டினான்.

   அ) மாலை ஆ) மாழை

   இ) மாளை ஈ) மலை

(5 புள்ளிகள்)

## (ஆ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.

1. நான் சென்ற வருட விடுமுறைக்கு இந்தியாவுக்குச் **சென்றேன்.**
   தம்பி அடுத்த வருட விடுமுறைக்கு இலங்கைக்குச் ____________________ .

2. நான் நேற்று நண்பர்களுடன் **விளையாடினேன்**.
   நான் நாளை தம்பியுடன் ____________________.

3. இன்று பாடசாலைக்கு மாணவர்கள் எல்லோரும் **வந்தார்கள்.**
   நாளைக்கும் பாடசாலைக்கு மாணவர்கள் எல்லோரும் ____________________.

4. நாளைக்குக் கண்ணன் எங்கள் வீட்டுக்கு **வருவான்.**
   நேற்றுக் கண்ணன் எங்கள் வீட்டுக்கு ____________________.

5. நான் தமிழை ஒரு பாடமாகக் **கற்கிறேன்.**
   நாம் தமிழை ஒரு பாடமாகக் ____________________.

(10 புள்ளிகள்)

## (இ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. வடக்கு + கிழக்கு : ____________________________
2. தமிழ் + இசை : ____________________________
3. எட்டு + திசை : ____________________________
4. கலை + திறன் : ____________________________
5. பத்து + இரண்டு : ____________________________

(10 புள்ளிகள்)

## (ஈ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. வாழைமரம் : _______________ + _______________
2. தமிழ்ச்சங்கம் : _______________ + _______________
3. கையெழுத்து : _______________ + _______________
4. சாலையோரம் : _______________ + _______________
5. முதற்பரிசு : _______________ + _______________

(10 புள்ளிகள்) [ ]

## (உ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி வசனத்தைப் பூர்த்தி செய்க.

1. வானவில்லிலே _________________ நிறங்கள் காணப்படும்.
2. ‘அகத்தின் அழகு _________________ தெரியும்’ என்பது பழமொழி.
3. நமது நாட்டில் பல்லின _________________ ஒற்றுமையாக வாழ்கின்றார்கள்.
4. ஆஸ்திரேலிய அரச சின்னத்தில் உள்ள உயிரினங்களில் ஒன்று ‘இமியு’ மற்றையது _________________ ஆகும்.
5. மாலையில் சூரியன் மேற்கில் _________________.
6. சேரர், சோழர், பாண்டியர் _________________ என்று போற்றப்பட்டார்கள்.
7. இரவில் வானத்தில் ஒளிர்விடும் _________________ பலவற்றைப் பார்த்து மகிழலாம்.
8. ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற _________________’ என்பது பழமொழி.
9. எனது மாமா தினமும் _________________ சென்று வழிபாடு செய்வார்.
10. திருக்குறள் அறம், பொருள், இன்பம் பற்றிச் சொல்வதால் __________நூல் எனப் போற்றப்படுகிறது.

(20 புள்ளிகள்) [ ]

## (ஊ) எதிர்ப் பொருள் தரும் சொல்லை எழுதுக.

1. பழையது : ______________________
2. இளமை : ______________________
3. இன்பம் : ______________________
4. இரவு : ______________________
5. முடிவு : ______________________

(5 புள்ளிகள்)

## (எ) ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.

1. தாய் : ______________________
2. ஆகாயம் : ______________________
3. சூரியன் : ______________________
4. மன்னன் : ______________________
5. மகிழ்ச்சி : ______________________

(5 புள்ளிகள்)

**(ஏ) கீழே தரப்பட்ட படத்தொடரைக் கவனமாகப் பார்த்து கருத்தை விளங்கிக் கொள்க. கதை விளங்கும்படியாகக் குறைந்தது ஐந்து (5) வசனங்கள் எழுதவும்.**

**படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை வசனம் எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.**

**குறிப்பு** : மிகக் குறைந்தது 6 சொற்கள் கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.




| | | |
|---|---|---|
| திட்டமிட்டனர் | தத்தளித்தல் | நீச்சல் |
| உதவிக்கு அழைத்தல் | பாடம் படித்தல் | உயிர்க்காப்பாளர் (life guard) |
| அறிவுரை கூறுதல் | காப்பாற்றினார் | ஆழமான பகுதி |
| | ஆழமில்லாத குளம் | |

1. ______________________________

______________________________

______________________________

2. ______________________________

______________________________

______________________________

3. ______________________________

______________________________

______________________________

4. ______________________________

______________________________

______________________________

5. ______________________________

______________________________

______________________________

(15 புள்ளிகள்)

## (ஐ) பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக்குக.

**உதாரணம்**: பறவை – **பறவைகள்**

1. குடை : ________________________
2. மனிதன் : ________________________
3. சிங்கம் : ________________________
4. சதுரம் : ________________________
5. புத்தகம் : ________________________

(10 புள்ளிகள்)

## (ஒ) கீழே தரப்பட்ட தொழில் செய்பவர்களுக்குரிய தொழிற் பெயர்களை கோடிட்டு இணைக்கவும்.

| | |
|---|---|
| 1. சித்திரம் வரைபவர் | தச்சர் |
| 2. மரவேலை செய்பவர் | ஓவியர் |
| 3. நெசவுத் தொழில் செய்பவர் | வைத்தியர் |
| 4. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பவர் | சிற்பி |
| 5. சிற்பங்களை உருவாக்குபவர் | நெசவாளர் |

(5 புள்ளிகள்)

## (ஓ) கீழே தரப்பட்டவற்றில் மிகவும் பொருத்தமானவற்றைக் கோடிட்டு இணைக்கவும்.

| | |
|---|---|
| 1. கவிச்சக்கரவர்த்தி | அரங்கம் |
| 2. வம்சம் | கம்பர் |
| 3. நாடகம் | தலைமுறை |
| 4. பிரதமர் | மாணவர்கள் |
| 5. பாடசாலை | பாராளுமன்றம் |

(5 புள்ளிகள்)